Date:30.10.2023

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

EA.8/2022 in EP.26/2023 in ACP.1/2010

ம.சா.1

**பெயர்-** திரு.வெங்கடேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த நிறைவேற்று மனு சொத்து எனது தந்தை மொட்டைய உடையார் எனது சித்தப்பா ரகோத்தமன் உடையார் ஆகியோர் இருவருக்கும் இடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாக பத்திரத்தில் எனது அப்பா மொட்டைய உடையாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். நானும் எனது தகப்பனார் மொட்டைய உடையாரும், எனது சகோதரர்கள் மணவாளன், சிவகுமார் ஆகிய 4பேரும் சேர்ந்து குடும்ப சொத்துக்களை பொறுத்து பாக பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். சில சொத்துக்களை நீக்கிவிட்டு பாகபிரிவினை செய்துக்கொண்டோம். நான் சொல்வதுபோல சில சொத்துக்களை நீக்கிவிட்டு பாகபிரிவினை செய்துக்கொண்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கும் அவரது சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகபத்திரத்தையும், எனக்கும் எனது சகோதரர் மற்றும் தந்தைக்கும் இடையே ஏற்பட்ட பாக பத்திரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவை என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.10.2003 தேதியிட்ட ம.சா.ஆ.4 பாக பிரிவினை பத்திரத்தில் சி அட்டவணை சொத்து எனது சகோதரர் மணவாளனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த சி அட்டவணை சொத்தில் 16 அயிட்ட சொத்துக்கள் மணவாளனுக்கு ஒதுக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு ஒதுக்கியது எனக்கு தெரியாது. அந்த பாக பிரிவினை பத்திரம் ம.சா.ஆ.4 பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 17 தாள்கள் கொண்ட ம.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் 2ம் பக்கத்தில் உள்ள ரேகை மற்றும் 2ம் கையெழுத்து என்னுடையது தான். இந்த கையெழுத்து பதிவு அலுவலகத்தில் பதிவாளர் முன்பாக

போடப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான். இந்த பாக பத்திரத்தில் சி அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்தும் நிறைவேற்று மனு எண்.26/2013ல் காண்பிக்கப்பட்டுள்ள சொத்தும் ஒன்றுதான் என்றால் தவறு. நிறைவேற்று மனு சொத்தும் பாக பிரிவினை சொத்தும் ஒன்று தான் என்றும், இல்லாவிடில் இந்த மனுவையே நாங்கள் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த மனுவில் சொத்துகளின் 4 எல்லைகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.167/7பி என்றால் சரிதான். எனக்கு ம.சா.ஆ.4 ஆவணத்தில் பி அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்தில் சர்வே எண்.167/7பி குறிப்பிடபடவில்லை என்றால் அந்த பாக பத்திரத்திலேயே சர்வே எண்.167/7பி யாருக்கும் ஒதுக்கப்படவில்லை. நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள ரைஸ்மில் அதை ஒட்டியுள்ள கட்டிடங்களும், இதர சொத்துக்களும் தான் பாக பத்திரத்தில் சி அட்டவணை சொத்தாக மணவாளனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. மணவாளனுக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்ணில ் அது இல்லை. ரைஸ் மில் சர்வே எண்.167/7பி மற்றும் 167/8 ஆகியவைகளில் உள்ளது. நிறைவேற்று மனுவில் கண்ட 16 அயிட்ட சொத்துக்களும் சர்வே எண்.167/7பி மற்றும் 167/8ல் தான் உள்ளது என்றால் சரியல்ல. தற்போது சாட்சி மாற்றி 167/8ல் ரைஸ்மில் உள்ளது என்றும், அது மணவாளனுக்கு ஒதுக்கப்படவில்லை என்று கூறுகிறார். ரைஸ்மில், தரை, மிஷின், கட்டிடங்கள், அதிலுள்ள மற்ற தளவாட சாமான்கள் அனைத்தும் பாக பிரிவினை பத்திரத்தின் படி மணவாளனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் இல்லை. நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்து மணவாளனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், அதில் உள்ள புல எண்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதை பயன்படுத்தி நான் இந்த மனுவை வீரபத்திரனுக்கு சாதகமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தின் 4 எல்லைகள் எனக்கு தெரியாது. ஞாபகத்தில் இல்லை. பாண்டி மெயின்ரோட்டிற்கு வடக்கு என்றால் ஞாபகம் இல்லை. ராமலிங்க ரெட்டியார் நிலத்திற்கு மேற்கு என்றால் ஞாபகம் இல்லை. ராமலிங்க ரெட்டியார், ஜெயராமன் நிலத்திற்கு தெற்கு என்றால் ஞாபகம் இல்லை. ராஜாங்க படையாட்சி நிலத்திற்கு கிழக்கு என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு சொத்தின் 4 எல்லைகள் தெரியும் என்றும், அந்த 4 எல்லைகளை குறிப்பிட்டால் அது எனது வழக்கிற்கு பாதகமாக போய்விடும் என்பதால் தான் எல்லைகளை குறிப்பிடவில்லை என்றும், தற்போதும்

அதனால்தான் எல்லைகள் ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது மனுவில் தவறாக மனு சொத்து மணவாளன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த ம.சா.ஆ.4 பாக பத்திரம் இன்றைய தேதியிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் 2022ம் வருடத்தில் தான் இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மணவாளனுக்கு ரைஸ்மில் தவறாக ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு 2020ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தான் தெரியவந்தது. பாக பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மை என ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலையில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை நான் மறுக்க முடியாது என்றால் சரியல்ல. எனது சகோதரர் மணவாளன் இதே நீதிமன்றத்தில் அவர் ஒரு பிரிவு 47 சிபிசி படி ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் அதை ஏற்க முடியாது. அந்த மனு முழுமையான விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அவருக்கு தெரியாமல் அந்த மனு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மணவாளனால் மனு தாக்கல் செய்யப்பட்டு அவர் விசாரணைக்கு வராமல் எதிர் மனுதாரரை விசாரணை செய்து மனு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் 2ம் எதிர் மனுதாரரின் மனைவி ஜோதிலட்சுமி மற்றும் பலராமன் என்பவர் பிரிவு 47 சிபிசி படி மனு தாக்கல் செய்து அவை விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்தரவு ம.சா.ஆ.17 மற்றும் 23 ஆக என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜோதிலட்சுமி அந்த உத்தரவுக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து அதுவும் விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மணவாளனுக்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் அவரே மனுவை தாக்கல் செய்ததால் தான் அவர் விசாரணைக்கு ஆஜராகாமல் விட்டுவிட்டார் என்றால் சரியல்ல. மணவாளனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து அவருக்கு உரிமையானது என்பதால் தான் அவர் நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்தை குறித்து ஜோதிலட்சுமிக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. ஜோதிலட்சுமிக்கு மணவாளன் எழுதிக்கொடுத்துள்ள பவர் பத்திரம் ம.சா.ஆ.7 ஆவணத்தை அனுசரித்து ம.சா.ஆ.9 ஆவணமான கிரைய

பத்திரத்தை எழுதி பதிவு செய்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த கிரைய பத்திரத்தில் சர்வே எண்.167ல் உள்ளது என்றால் சரியல்ல. (குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்டதின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)